பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லும்போது அதில் சர்க்காருடைய முயற்சிக்கு குறைவு இல்லை. வெளி நாட்டு உதவி எவ்வளவு கிடக்கிறதோ அதைப் பொறுத்து இருக்கிறது சர்க்காருடைய முயற்சி. அதற்கு வெளி நாட்டிலிருந்து வரக்கூடிய உதவியைக் கொண்டுதான் நிறைவேற்ற முடியும். அது இல்லாமல் ஒன்றும் செய்வதற்கு இல்லை. முதலில் "டேனிஷ் கோவாபரேஷன்" எங்களுக்கு உதவி செய்ய முன் வந்தார்கள். அப்பொழுது எல்லா திட்டங்களையும் செய்ய தயாராக இருந்தோம். பிறகு அவர்கள் பின் வாங்கி விட்டார்கள். அதனால் அவைகளை இப்பொழுது கொண்டு வர முடியவில்லை. அதனால் இப்பொழுது முடியும் என்று சொல்வதற்கு இல்லை.

Oil-mongers' Association, Pazhampettai

* 370 *Q*.—SRI M. P. SARATHI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், பழம்பேட்டை எண்ணெய் உற்பத்தியாளர் சங்கத்தில் சமீபத்தில் பூட்டை உடைத்துத் திருட்டு நடந்ததாக போலீசாரிடம் புகார் வந்ததா ?

(இ) போலீசாரின் புலன் விசாரணை எந்த நிலையில் உள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir. The complaint was made in March 1959.

(*b*) The case was treated as false, after a thorough investigation, and the person who gave the false complaint was appropriately punished by the competent courts.

SRI M. P. SARATHI : சார், போலீசார் விசாரணையில் அந்தப் புகார் செய்தவர்தான் அந்தக் குற்றத்தைச் செய்திருப்பதாகச் சொல்லி இருக்கிறார்களா ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதையேதான் நான் பதிலும் சொன்னேன். புகார் செய்தவரே பணத்தை எடுத்துக் கொண்டு விட்டு புகார் செய்திருக்கிறார் என்று தெரிய வந்தது. அதன்பேரில் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த வகையில் அவருக்கு ஐம்பது ரூபாய் அபராதம் ; அதைக் கட்டத் தவறினால் ஆறு மாத சிறை தண்டனை என்று தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது.

Adulteration

* 371 *Q*.—SRI A. VEDARATHNAM : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கூட்டுறவு சங்கங்கள் நடத்தும் உணவுப் பொருள் வர்த்தகத்தில் கலப்படமிருக்கிறதா எனப் பரிசீலனை செய்யப்படுகிறதா ?